பாடம் : வரலாறு
தரம் : 11
அலகு : 03 இலங்கையில் சமய, பண்பாட்டு மறுமலர்ச்சி

(1) தேசிய மறுமலர்ச்சி என்றால் என்ன?

மிசனரிக் கல்விமுறையினால் பௌத்த, இந்து, இஸ்லாம் கலாசாரத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்திசெய்ய மேற்கொள்ளப்பட்ட இத்தகைய முயற்சியினை தேசிய மறுமலர்ச்சி எனப்படும்.

(2) மிசனறி இயக்கம் என்றால் என்ன?

கல்வி, தொடர்பு சாதனங்கள் பல்வேறு செயலொழுங்குகள் மூலம் தமது சமயத்தைப் பரப்புவதற்காக கிறிஸ்தவர்களால் அமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் மிசனறி இயக்கம் எனப்படும்.

(3) 19ம் நூற்றாண்டில் இலங்கை செயற்பட்ட மிசனறி இயங்கங்களையும் அவை நடவடிக்கையில் ஈடுபட்ட இடங்களையும் குறிப்பிடுக.

(1) கி.பி. 1812 இல் கொழும்பை மையமாகக் கொண்டு பப்டிஸ்ட் மிசனறி இயக்கம் செயற்பட்டது.
(2) கி.பி. 1814 இல் வெஸ்லியன் மிசனறி இயக்கம் நாட்டின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் செயற்பட்டது.
(3) கி.பி. 1816 இல் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கல்விமட்டத்தை உயர்த்திச் செல்வதற்கு அமெரிக்க மிசனறி இயக்கம் செயற்பட்டது.
(4) கி.பி. 1818 இல் சேர்ச் மிசனறி இயக்கம் நாட்டின் பல பகுதிகளில் (யாழ்ப்பாணம், கண்டி, காலி, கொழும்பு, மன்னார், கற்பிட்டி) தமது கல்விப் பணியினை மேற்கொண்டது.

(4) இலங்கையில் செயற்பட்ட மிசனறி இயக்கங்களின் செயற்பாடுகள் 3 தருக ?

பிரித்தானிய அரசின் பூரண ஆதரவுடன் செயற்பட்ட மிசனறிகள் பின்வரும் வழிகள் ஊடாக தமது பணியினை செய்தது.

- ✓ மிசனறிகள் சுயமொழிகளைக் (சிங்களம், தமிழ்) கற்று அவ்மொழிகளில் தமது கிறிஸ்தவ நூல்களை அச்சிட்டு வெளியிட்டமை.
- ✓ முக்கிய நகரங்களில் ஆங்கில மொழிமூலப் பாடசாலைகளை நிறுவி அதனூடாக தமது சமயத்தைப் பரப்பினர்.
- ✓ அரசாங்கத்தில் பதவிகள், சலுகைகள் பெறுவதற்காக சுதேச மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவ தூண்டப்பட்டனர்.
- ✓ மிசனறிகள் கிராமங்களில் சமூக சேவைகளை மேற்கொண்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்று அதனுடாக சமயத்தை பரப்பியது

www.kcdu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk

(5) எமது நாட்டு சுதேச மக்கள் மிசனறிக் கல்விமுறையை எதிர்த்தமைக்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக..

(1) ஆங்கில கல்வியும், கிறிதவ சமய பிரச்சாரமும் பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தியமை.

(2) ஆங்கிலம் கற்று அரசாங்கச் சலுகைகள் பெறவிரும்பிய இலங்கையர் தமது சமயத்தைக் கைவிட்டு கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக்கொண்டமை.

(3) பௌத்த, இந்து சமயங்களின் சிலை வணக்கங்களையும், மத அனுட்டானங்களையும் இழிவாக மதித்து மிசனறிமார்கள் நாடுபூராகவும் பிரச்சாரம் செய்தமை.

(4) ஆங்கிலேய அரசாங்கம் முழு ஆதரவையும் ஆங்கில கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கு வழங்கியதால் தமிழ், சிங்கள மொழிப்பாடசாலைகள் வீழ்யுற்றமை.

(5) பாதிக்கப்பட்ட பௌத்த, இந்துக்களின் குறைகளை ஆங்கிலேய அரசாங்கம் தட்டிக்கழித்தமை.

(6) 19ம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சியின் இயக்கங்களையும் அதன் தாபகத் தலைவர்களையும் தருக ?

(1) பொளத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்ட நான்கு தலைவர்களைக் குறிப்பிடுக.

- ஹென்றி ஸ்ரீல்ஒல்கொட் - அனகாரிக தர்மபாலா
- ஹரிச்சந்திரா - டி.பி. ஜயதிலக

(2) இந்து சமய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த இரண்டு பிரமுகர்களைக் குறிப்பிடுக.

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
- சேர் பொன்னம்பலம் இராமநாதன்
- சேர் பொன்னம்பலம் அருனாச்சலம்

(3) இஸ்லாமிய சமயவளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த இரண்டு பிரமுகர்களைக் குறிப்பிடுக.

- எம்.சீ. சித்திலெவ்வை - டீ.பீ. ஜாயா

(7) தேசிய மறுமலர்ச்சி இயக்கங்களின் தோற்றம் பற்றி கூறுக :

பிரித்தானியரின் ஆட்ச்சியின் கீழ் அவர்களின் கலை, கலாச்சார கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தச் செல்வதற்காக நாட்டின் பல்வேறு இடங்களிலும் மிசனறி இயக்கங்களை தோற்றுவித்தனர். இதனுடாக சமூக மேம்பாட்டுக்கான திட்டங்கள் என்ற வகையில் ஆங்கில கல்விக்கும், கிறிஸ்தவ மத கல்விக்கும் முக்கியதுவத்தை வழங்கியதோடு, தமது வருமான அதிகரிப்புக்கான மதுபானசாலைகளையும் அமைத்தனர் இதன் காரணமாக சுதேச சமூகங்களின் சமய கலை, கலாச்சார கல்விச் செயற்பாடுகளில் ஏற்பட்ட பாதிப்பினை தடுப்பதற்காகவும், மக்களுக்கு அறிவூட்டல் வேலைத்திட்டத்தினை மேற்கொள்வதற்காவும் தேசிய மறுமலர்ச்சி இயக்னங்கள் பல தோற்றம் பெற்றன.

(8) பௌத மத மறுமலர்ச்சிக்கான ஆரம்ப பணி யாது?

பாணந்துறை, வளானை வண ஸ்ரீ சித்தார்ந்த அவர்கள் இரத்மலானையில் பரமதமம்மசேதிதயவை உருவாக்கி அதனூடாக துறவிகளான கல்விமான்கள் மட்டுமன்றி துறவிகள் அல்லாத கல்விமான்களையும் உருவாக்கினார்

www.ikedu.lk

(9) 19ம் நூற்றாண்டில் இலங்கையின் சமய, பண்பாட்டு விழிப்புத் தொடர்பாக தோற்றம் பெற்ற சமய நிறுவனங்களையும் அதனை தாபித்த பிரமுகர்களையும் குறிப்பிடுக.

(1) கி.பி. 1853 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் சைவ சமயக் கோட்பாட்டைப் பரப்ப சைவ பரிபாலன சபை, இந்துக்கல்விச்சபை போன்றவற்றை நிறுவினார்.
(2) கி.பி. 1880 இல் கேணல் கென்றி ஸ்ரீல் ஒல்கொட் அவர்கள் பரமஞான சங்கத்தின் (பிரமஞான சங்கம்) ஒரு கிளையொன்றை கொழும்பில் நிறுவினார். இதன் மூலம் பௌத்த பிள்ளைகளின் ஆங்கில மொழிமூல பௌத்த பாடசாலைகளை ஏற்படுத்தினார்.
(3) கி.பி. 1891 இல் அநகாரிக தர்மபால அவர்கள் புத்தகயாவைப் பாதுகாக்க "மகாபோதி சங்கத்தை" உருவாக்கினார்.
(4) கி.பி. 1898 டீ.பி. ஜயதிலக அவர்கள் பௌத்த இளைஞர் சங்கத்தை ஆரம்பித்து அதன் மூலம் ஞாயிறு அறநெறிப் பாடசாலைகள் செயற்படுவதற்கு வழிவகுத்தார்.

(10) கேணல் ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட்டின் சமய, கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

(1) ஞாயிறு தர்ம பாடசாலைகளை நிறுவியமை.
(2) ஆங்கில மொழிப் பௌத்த பாடசாலைகளை நிறுவியமை.
உதாரணம் : கொழும்பில் ஆனந்தாக் கல்லூரி, நாலந்தா கல்லூரி போன்ற ஆண்கள் பாடசாலைகளையும், விசாகா, மியூசியஸ் பெண்கள் பாடசாலைகளையும் நிறுவினார்.
காலியில் மஹிந்த ஆண்கள் பாடசாலையையும், சங்கமித்த பெண்கள் பாடசாலையையும் நிறுவினார்.
கண்டியில் தர்மராஜா கல்லூரியையும் நிறுவினார்.
(3) வெசாக் போயா தினத்தை அரசாங்க விடுமுறை தினமாக மாற்றினார்.
(4) ஐந்து நிறங்களைக் கொண்ட பௌத்த கொடியை உருவாக்கினார்.
(5) "சரவிசத்தரஸ்" என்ற பௌத்த தினசரிப் பத்திரிகையையும் "தபுடிஸ்ற்" என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் ஆரம்பித்தார்.

www.ikedu.lk

(11) அநகரிக தர்மபால அவர்களின் சமய, கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

அநகாரிய தர்மபாலவினது இயற்பெயர் **டேவிட் ஹேவாவிதாரண** என்பதாகும்.

- ✓ பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக 1891ல் மகாபோதி சங்கத்தை ஆரம்பித்து இதன் மூலம் **The British News** (த பிரிட்டிஸ் நியூஸ்) என்னும் ஆங்கில சஞ்சிகையையும், மகாபோதி, சிங்கள பௌத்தயா போன்ற சஞ்சிகைகளையும் எழுதி வெளியிட்டார்.
- ✓ புத்தகயாவைப் பாதுகாக்க 1891 இல் மகாபோதி சங்கத்தை உருவாக்கி வெற்றியும் கண்டார்.
- ✓ மகாபோதி சங்கத்தின் மூலம் பௌத்த பாடசாலைகளை ஆரம்பித்தார். உதாரணம் : கொழும்பு ஆனந்த பாலிகா மகளிர் கல்லூரி,பன்னிப்பிட்டி தர்மபால வித்தியாலயம்.
- ✓ மகாபோதி சங்கக்கிளைகளை இந்தியாவின் முக்கிய நகரங்களில் நிறுவினார். உதாரணம் : கல்கத்தா, சாரணாத், டில்லி, பம்பாய், சென்னை
- ✓ தேவாத பௌத்தத்தை ஆசிய, தென்கிழக்காசிய நாடுகளுக்கு சென்று பரப்பினார். உ-ம் :ஜப்பான்,சீனா,இந்தியா,தாய்லாந்து,இந்தோனேசியா,கொரியா
- ✓ சிக்காக்கோவில் நடைபெற்ற உலக சமய பாராளுமன்றத்தில் "தர்ம" பற்றி உரை நிகழ்த்தினார்.
- ✓ மகாபோதி சஞ்சிகை வாராந்த வெளியீடான ஷஷிசிங்கள பௌத்தய" மூலம் பௌத்த மக்களிடையே போராட்ட உணர்ச்சியைத் தோற்றுவித்தார்.

(12) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் இந்து சமய, கலாச்சார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

- ✓ இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் செயற்பட்டார்
- ✓ ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தாம் பெற்றிருந்த உயரம் மட்ட அறிவைத் தமது சேவைகளுக்காகப் பயன்படுத்தினார்
- ✓ இந்து சமயப் பிள்ளைகளுக்காக தமது வீட்டில் வகுப்புகள் நடத்தினார்
- ✓ சைவ பரிபாலன சபை, இந்து கல்விச் சபை ஆகியவற்றைத் தாபித்தார்
- ✓ யாழ்ப்பாணத்தில் இந்து ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார்
- ✓ இந்து பிள்ளைகளுக்காக நூல்களை எழுதியமை, தமிழில் எழுதப்பட்ட உரைநடைகள், செய்யுள்கள், பாடல்கள் போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.
- ✓ கி.பி. 1853 ல் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பித்தார்.
- ✓ மேர்ஸிவல் அடிகளாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார்.
- ✓ கி.பி. 1853 ல் சைவச்சமயக் கோட்பாடுகளைப் பரப்ப சைவ பரிபாலன சபை, இந்து கல்விச் சபையை நிறுவினார்.
- ✓ பாலர்பாடம், இலக்கணச்சுருக்கம் என்ற தமிழ் நூல்களை எழுதினார்.
- ✓ உரைநடைப்பாடல் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

(13) அறிஞர் சித்திலெப்பை அவர்கள் இஸ்லாமிய சமய கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

- 🗁 ஆங்கிலமொழி, இஸ்லாமிய ஸாஹிறாக்கல்லூரியை கொழும்பிலும் சித்திலெப்பை முஸ்லிம் பாடசாலையை கண்டியிலும் நிறுவினார்.
- 🗁 ஞானதீபம், முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகைகளை வெளியிட்டார்.
- 🗁 கொழும்பு முஸ்லிம் சங்கத்தை அமைத்தார்.
- 🗁 மத்ரஸா முஸ்லிம் மதப்பாடசாலைகளின் புனரமைப்புப் பணியினை மேற்கொண்டார்.

www.kedu.lk

(14) சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சமய கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

- ❖ கி.பி. 1913 ல் யாழ்ப்பாணம் மருதனாமடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியையும் கி.பி. 1921 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பரமேஸ்வரா ஆண்கள் கல்லூரியையும் ஆரம்பித்தார்.
- ❖ கொழும்பில் பொன்னம்பலவானேஸ்வரர் கோயிலைக்கட்டினார்.
- ❖ கி.பி. 1915 இல் சிங்கள - முஸ்லிம் கலவரத்தில் கைது செய்யப்பட்ட சிங்களத்தலைவர்களை காப்பாற்றியமை.

(15) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் அவர்களின் சமய, கலாசார மறுமலர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விபரிக்குக.

- ▪ கி.பி. 1793 இல் மாளிகாகந்தையில் வித்தியோதப் பிரிவெனாவை ஆரம்பித்தார்.
- ▪ கி.பி. 1865 இல் முதலாவது பௌத்த பத்திரிகையான "லக்மினி மஹனவை" வெளியிட்டார்.
- ▪ லங்காலோகய, சமதி எனும் சிங்களப் பத்திரிகையை ஆரம்பித்தார்.

(16) கி.பி.1873 இல் நடைபெற்ற மிசனறிப் பாதிரிமார்களின் பிரச்சாரங்களுக்கு எதிரான பாணந்துறை பகிரங்க விவாதம் மூலம் புகழ்பெற்ற பிக்கு யார்?

மிதொட்டுவத்த குணானந்த தேரர்

(17) "பஞ்ச மகாவிவாதங்கள்" என்பதன் பொருள் யாது?

- கி.பி. 1860 ல் "கோகர்லி" எனும் பாதிரியார் பௌத்த சமயம் பொய்யானது என்பதை நிரூபிக்க ஆதாரங்களை திரட்டினார்.
- இதற்குப் பதிலடி கொடுப்பதற்காக பௌத்த குருமார்கள் கிறிஸ்தவ பாதிரிமார்களுடன் பகிரங்க விவாதங்கள் ஐந்து இடங்களில் நடைபெற்றதால் பஞ்சமகா விவாதங்கள் என அழைக்கப்பட்டன.

(18) பஞ்ச மகா விவாதங்கள் நடைபெற்ற இடங்கள் யாவை?

- கி.பி. 1864 பத்தேகம
- கி.பி. 1865 வாரகொட
- கி.பி. 1866 உதம்மிட்ட
- கி.பி. 1871 கம்பளை
- கி.பி. 1873 பாணந்துறை

(19) பாணந்துறை விவாதத்தில் பங்குபற்றியவர்கள் யாவர்?

- மிகெட்டுவத்த குணானந்த தேரர்
- ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கலதேரர்
- பொத்துவல இந்திர ஜோதிதேரர்
- வஸ்கடுவ ஸ்ரீசுபூதி தேரர்

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(20) பஞ்ச மகா விவாதங்களின் விளைவுகள் யாவை?

- இலங்கை மிசனறி பாதிரிமார்களின் பௌத்த சமயம் பொய்யானது என்ற மாயை நீக்கப்பட்டமை.
- இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்கு ஒரு புதிய யுகம் உதயமானது.
- விவாதங்கள் சர்வதேச நாடுகளில் பிரபல்யமடைந்தமை.
- அமெரிக்கரான ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட், ஹெலனா பலவெட்ஸ்கி அம்மையர் முதலியோர் இலங்கைவந்து பௌத்த சமயத்திற்காகத் தொண்டாற்றியமை.

(21) பௌத்த சமய மறுமலர்ச்சியின் முன்னோடிகளும் அவர்களின் நிறுவன அமைப்புக்களையும் குறிப்பிடுக.

(✂) கி.பி. 1835 வலானே சித்தாரத் தேரர்.
இரத்மலானை பரமதரம்ம சைத்திய பிரிவெனா

(✂) கி.பி. 1873 ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
மாளிகாகந்த வித்தியோதய பிரிவெனா

(✂) கி.பி. 1875 இரத்மலானை தர்மலோக தேரர்
பேலியகொட வித்தியாலங்கார பிரிவெனா

(22) பௌதமத மறுமலர்ச்சியில் அச்சகங்கள் நிறுவப்பட்டமையும் அதன் பங்களிப்பையும் கூறுக :

பௌத்தர்களின் மறுமலர்ச்சிக்காக அச்சகம் ஒன்று இல்லாமை ஒருகுறைபாடாக இருந்தது. இதற்காக புலத்கம தம்மாலங்கார ஸ்ரீ சுமண திஸ்ஸ தேரர் நடவடிக்கை மேற்கொண்டார். இதற்காக செல்வந்த மக்களிடமும், சீய (தாய்லாந்து) அரசிடமும் உதவியைப் பெற்று **1862 காலியில் லங்காலோபகார** அச்சகத்தை நிர்மானித்தார். இந்த வகையில் லக்மினி பஹன, லங்கா லோகய, சரசவி சந்தரச, சிங்கள ஜாதிய, சிங்கள பௌத்தயா போன்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டன.

(23) தேசிய மறுமலர்ச்சியில் மது ஒழிப்பு இயக்கத்தின் பங்களிப்பையும் கூறுக :

- ✓ நாட்டின் தேசிய கலாச்சாரத்தை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே மது ஒழிப்பு இயக்கமாகும்.
- ✓ இவ்வியக்கத்தின் தந்தையாக ஆதர் வீ தியேஸ் அவர்களைக் குறிப்பிடலாம்.
- ✓ பிரித்தானியர் தமது வருமானத்தை அதிகரிப்பதற்காக மது வியாபாரத்தை அதிகாரித்தனர்.
- ✓ இதற்காக இக்காலத்தில் பிரித்தானிய அரசாங்கம் மதுவரிச்சட்டத்தை 1912.மே.31 ல் அங்கிகரித்தது. இதன்மூலம் நாடு முழுவதும் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டன. நகரங்கள், கிராமங்கள் தோறும் தொற்று நோய் போல சாராயத் தவறணைகள் பரவலடைந்தன. அவர்களது எதிர்பார்ப்பு போல வருமானமும் அதிகரித்தது. அத்துடன் தேசிய சமயமும், கலாச்சாரமும் சீரழிந்தது.
- ✓ இதனை எதிர்த்து பின்வரும் தலைவர்கள் செயற்பட்டனர். DC, சேனாநாயக்க, DS. சேனாநாயக்க, FR, சேனாநாயக்க, அநகாரிய தர்மபால பியதாச சிறிசேன, ஆதர் வீ தியேஸ், DP. ஐயதிலக்க போன்றோர்.
- ✓ கிராமங்கள், நகரங்கள் தோறும் கலந்துரையாடல், கூட்டங்கள் என மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படத்தப்பட்டதுடன் மது ஒழிப்பு இயக்கக் கிளையும் உருவாக்கப்பட்டது. மதுவின் தீமைகள் பற்றி பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் மூலமும் பிரச்சாரங்கள் இடம் பெற்றது.

www.ikedu.lk